**செ.வெ.எண்: 38** **நாள்: 12.01.2017**

**பத்திரிகைச்செய்தி**

தமிழ்நாடு மதுபான சில்லரை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்கள்) விதிகள் 2003 (அரசு ஆணை (பல்வகை) எண்.292, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (VI) நாள் 03.11.2003)-இன் விதி 12-இல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு **15.01.2017 அன்று திருவள்ளுவர் தினத்தை** முன்னிட்டும், **26.01.2017 அன்று குடியரசுதினத்தை** முன்னிட்டும் டாஸ்மாக் நிறுவனத்தின் அனைத்து இந்திய தயாரிப்பு அந்நிய மதுபான சில்லரை விற்பனைக் கடைகள் மற்றும் மதுபானக் கூடங்களில் விற்பனை நடைபெறாமலும், மூடப்பட்டும் இருக்க வேண்டும். எனவே, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக் மதுபானக் கடைகள் மதுபானக்கூடங்கள்(பார்) மற்றும் FL3, ஹோட்டல் பார்கள் ஆகியவற்றில் **மேற்கண்ட இரண்டு நாட்களும்** மது விற்பனை ஏதும் நடைபெறாது என்றும், அவை யாவும் மூடப்பட்டிருக்க வேண்டும் என்றும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**